# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.10

## 2019, பிப்ரவரி 14, வியாழக்கிழமை

## விளம்பி, மாசி 2, திருவள்ளுவர் ஆண்டு - 2050

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை **10.00** மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:—

**" எவ்வது உறைவது உலகம்; உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு. "**

(உலகத்தில் உள்ள சான்றோர்கள் எப்படி வாழ்கிறார்களோ அதுபோல அவர்களைப் பின்பற்றி அவர்கள் கூறும் வாழ்வியல் நெறிப்படி வாழ்வதே உயர்ந்த அறிவுடைமை ஆகும்.)

**1. வினாக்கள் - விடைகள்**

வரிசை எண்கள் 71 முதல் 80 வரையுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் பேரவையில் வினவப்பட்டு விடையளிக்கப்பட்டன.

**2. தகவல் கோரல்**

(1) " செம்மொழி தமிழாய்வு நிறுவனத்திற்கு போதிய நிதியை மத்திய அரசு வழங்காதது " குறித்து திரு. மு.க. ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தகவல் கோரினார்.

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து பதிலளித்தார்.

(2) " தமிழ்நாடு வனச் சட்டம், 1882 பிரிவு 16—A என்ற பிரிவு சேர்க்கப்பட்டதால், கூடலூர் ஜென்மம் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரிக்கு மாற்றம்) சட்டம், 1969—ம் பிரிவு 17—இன் கீழ் வரும் நிலத்தில் குடியிருக்கும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்படுவது" குறித்து திரு. மு. திராவிடமணி அவர்கள் தகவல் கோரினார்.

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து பதிலளித்தார்.

(3) " துறைமுகம் தொகுதி யானைகவுனி நயினார் மேம்பாலப் பணிகளை விரைந்து முடிப்பது " குறித்து திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் தகவல் கோரினார்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து பதிலளித்தார்.

(4) " திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதி மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு முகத்துவாரத்தினை தூர்வார வேண்டியது " குறித்து திரு. பி. பலராமன் அவர்கள் தகவல் கோரினார்.

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து பதிலளித்தார்.

**3. பேரவை விதி 110-இன் கீழ் அறிக்கை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110—இன் கீழ் அறிக்கை ஒன்றினை பேரவைக்கு அளித்தார்.

நம் நாட்டின் சுதந்திரத்திற்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், சமுதாய மேம்பாட்டிற்காகவும் மற்றும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் வித்திட்ட பல ஆன்றோர்களையும், சான்றோர்களையும் பல்வேறு காலகட்டங்களில் தமிழ்நாடு அரசு பாராட்டியும், கௌரவப்படுத்தியும் வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் தொடர்ந்து இத்தகு ஆன்றோர்களையும், சான்றோர்களையும் பெருமைப்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

## அறிவிப்புகள்

1. "எளிமையான தோற்றமும், ஞானத்தின் உச்சமும், குழந்தைகள் மீது அளவற்ற அன்பும் கொண்டவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். குழந்தைகள் விரும்புகின்ற கவிதைகளைத் தந்து, மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற அன்னாருக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் முழு உருவ வெண்கலச் சிலையினை அமைத்து பெருமை சேர்த்தார்கள். தமிழ் அன்னைக்கு தனது பாடல்களால் மலரும், மாலையும் சூட்டி அழகு பார்த்த **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு, அன்னாருடைய பிறந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டம், தேரூரில் மணி மண்டபம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று, ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் அமைக்கப்படும்.**

2. கி.பி.7ஆம் நூற்றாண்டில் தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் களம் பல கண்டு, வெற்றிகள் பல கொண்டு ஆட்சி செய்தவர் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் ஆவார். அவரின் வீரத்தை பெருமைப்படுத்தும் விதத்தில் 1996–ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகரில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்னாருக்கு அரசு சார்பில் சிலை ஒன்றை நிறுவினார்கள். அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, அவருடைய புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் விதத்தில், **பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் அமைக்கப்படும்.**

3. திரு. இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் அரசியல்வாதி, சமூக சீர்திருத்தவாதி, வழக்கறிஞர் என பன்முகங்களைக் கொண்டு, ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகக் குரல் கொடுத்தவர். அவருடைய சேவையை பாராட்டி, அன்னாருக்கு 'ராவ் சாகிப்', 'திவான் பகதூர்', 'ராவ் பகதூர்' போன்ற பட்டங்களை பிரிட்டிஷ் அரசு வழங்கி கௌரவப்படுத்தியது. அன்னாரை பெருமைப்படுத்தும் விதமாக அவரது பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, **இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பிறந்த இடமான மதுராந்தகம் அருகில் உள்ள கோழியாளம் கிராமத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபமும், அதிலேயே நூலகமும் அமைக்கப்படும்.**

4. விவசாயக் குடும்பத்தில் பிறந்து, விவசாயிகளின் நலனைக் காக்க பரம்பிக்குளம் ஆழியாறு அணைக்கட்டுத் திட்டம் தொடங்க காரணகர்த்தாவாக இருந்தவர் திரு.வி.கே.பழனிசாமி கவுண்டர். அவர் சட்டமன்ற மேலவை துணைத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார். அப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று **திரு. வி.கே.பழனிசாமி கவுண்டர் அவர்களை சிறப்பு செய்யும் விதமாக அவர் பிறந்த இடமான கோயம்புத்தூர் மாவட்டம் வேட்டைக்காரன் புதூரில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

5. வழக்கறிஞராக பணியினைத் தொடங்கி, சென்னை மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினராகவும், உள் துறை மற்றும் நிதித் துறை அமைச்சராகவும் பணிபுரிந்து, ஆங்கிலேய அரசால் ''ராவ் பகதூர்'' மற்றும் ''சர்'' பட்டங்களையும் பெற்றவர் சர். ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள். நீதிக்கட்சியின் வைரத் தூண் என்று அழைக்கப்பட்ட **அன்னாருக்கு அப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவ சிலையுடன் கூடிய மணி மண்டபம் அமைத்து, ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.**

6. நாமக்கல் மாவட்டம் ஜேடர்பாளையத்தில் காவேரியின் குறுக்கே தடுப்பணை அமைத்து சுமார் 5 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பயன் பெற, ராஜ வாய்க்கால் ஏற்படுத்தியவர் திரு. அல்லாள இளைய நாயகர். இன்றளவும் அப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரமாகவே திகழ்கின்ற அக்கால்வாயை அமைத்த அன்னாரை பெருமைப்படுத்தும் வகையில், அப்பகுதி விவசாய பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று **திரு. அல்லாள இளைய நாயகர்** அவர்களுக்கு **ஜேடர்பாளையத்தில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குவிமாடத்துடன் (Dome) திருவுருவச் சிலை அமைக்கப்படும்.**

7. பூலித்தேவன் படையில் படைவீரனாகவும், படைத் தளபதியாகவும் இருந்த விடுதலைப் போராட்ட வீரரான ஒண்டிவீரன் அவர்களுக்கு 2016ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மணி மண்டபம் அமைத்து திறந்து வைத்தார்கள். அன்னாரது பெருமையை மேலும் சிறப்பிக்கும் வகையில் **திருநெல்வேலி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒண்டிவீரன் மணி மண்டபத்தை 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், அந்த வளாகத்தில் ஒரு நூலகமும் அமைக்கப்படும்.**

8. நேர்மை, வீரம், புத்திக்கூர்மை ஆகியவற்றை ஒருங்கே கொண்டு, வீரபாண்டிய கட்டபொம்மனின் வீரத் தளபதியாக விளங்கியவர் வீரன் சுந்தரலிங்கம் அவர்கள். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பே வெள்ளையருக்கு எதிராக முதல் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தியவர் வீரன் சுந்தரலிங்கனார் அவர்கள். அன்னாருக்கு 14.6.2005 அன்று தூத்துக்குடி மாவட்டம் கவர்ணகிரியில் மணி மண்டபம் அமைக்க ஆணை வெளியிட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெருமை சேர்த்தார்கள். அவருக்கு மேலும் பெருமை சேர்க்க மாண்புமிகு அம்மாவின் அரசு கவர்ணகிரியில் அமைந்துள்ள **வீரன் சுந்தரலிங்கனார் மணி மண்டபத்தை 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், ஒரு நூலகமும் அதிலேயே அமைக்கும்.**

<u>அரசு விழாக்கள்</u>

9. துணிச்சல், மன உறுதி, தன்னம்பிக்கையுடன் விவசாயிகளின் உயிர்நாடியாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணையை தனது சொந்த செலவில் கட்டி தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்கள் பாசன வசதி பெற வழிவகுத்த **கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் பிறந்த நாளினை** ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாட அப்பகுதி விவசாய பெருமக்கள் கோரிக்கை விடுத்தனர். அவர்களது கோரிக்கையினை ஏற்று **கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் பிறந்த நாளான ஜனவரி மாதம் 15ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும்.**

10. பவானி ஆறு காவேரி ஆற்றுடன் கூடும் இடத்திற்கு சற்று முன்பே அணை கட்டி பவானி ஆற்றின் நீரை வாய்க்கால் மூலம் நேராகக் கொண்டு சென்றால் தண்ணீர் விரைந்து ஓடிவிடும் என்பதாலும், வாய்க்கால்களை வளைத்து வளைத்து வெட்டுவதனால் அதிக பரப்பளவு பாசனம் பெறும் என்ற தொலைநோக்கு சிந்தனையுடனும், விவசாயிகளின் நலன்களுக்காக வாய்க்கால்களை திறம்பட வெட்டி பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தை மாதம் 5ஆம் தேதி நாட்டுக்கு அர்ப்பணித்தவர் திரு. காலிங்கராயன் அவர்கள். அன்னாரை சிறப்பு செய்யும் வகையில் தை மாதம் 5ஆம் தேதியன்று பொது மக்கள் சார்பாக காலிங்கராயன் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அவருக்கு மேலும் சிறப்பு செய்யும் விதமாக 13.5.2018 அன்று அவரது முழு உருவ வெண்கல சிலையுடன் கூடிய மணி மண்டபம் என்னால் திறந்து வைக்கப்பட்டது. **திரு. காலிங்கராயன் அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில் ஆண்டுதோறும் தை மாதம் 5ஆம் தேதி அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.**

11. சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக் கோனின் வீரத்தையும் வரலாற்றையும் உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில், சென்னை எழும்பூரில் அமைக்கப்பட்ட சிலையை 15.3.1996 அன்றும், தூத்துக்குடி மாவட்டம், கட்டாளங்குளத்தில் நினைவு மண்டபத்தை 8.12.2014 அன்றும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திறந்து வைத்து அன்னாருக்கு பெருமை சேர்த்தார்கள். தூத்துக்குடி மாவட்டம், கட்டாளங்குளத்தில் உள்ள அன்னாரது நினைவு மண்டபத்தில் ஆண்டுதோறும், அவரது பிறந்த நாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்னாருக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக, **சென்னை, எழும்பூரில் அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள வீரன் அழகுமுத்துக் கோன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் ஜூலை 11ஆம் நாள் அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்பிக்கப்படும்.**

12. இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், சிறந்த தமிழ் அறிஞரும், சிலப்பதிகாரத்தின் மீது ஆளுமை கொண்டிருந்த சிலம்புச் செல்வர் என அனைவராலும் அறியப்பட்டவர், முன்னாள் மேலவைத் தலைவர் திரு. ம.பொ.சிவஞானம் அவர்கள். மொழிவாரி மாநிலங்கள் பிரிவினையின்போது, சென்னையை தமிழ்நாட்டின் தலைநகராக தொடரச் செய்யவும், திருத்தணி, செங்கோட்டை பகுதிகளையும், கன்னியாகுமரி மாவட்டத்தையும் தமிழ்நாட்டுடன் இணைக்க பாடுபட்டவர்; எழுத்து சீர்திருத்தத்தின் போது 'ஐ'–யும், 'ஔ'–வும் தமிழ் மொழியில் தொடரச் செய்தவர் திரு. ம.பொ.சிவஞானம் அவர்கள். அவரது தமிழ் தொண்டினை போற்றிடும் வகையில், சென்னை, தியாகராய நகரில் அமைக்கப்பட்டுள்ள **திரு. ம.பொ.சிவஞானம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அன்னாரின் பிறந்த நாளான ஜூன் 26 அன்று அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்பிக்கப்படும்.**

13. தமிழ்நாட்டில் இதழியல் முன்னோடியும், இன்றைய முன்னணி நாளிதழ்களில் ஒன்றான "**தினத்தந்தி**" தமிழ் நாளிதழைத் தொடங்கி, பாமரரும், பாட்டாளியும் எளிய தமிழ் மூலம் படிக்க வழிவகை செய்தவர் திரு. சி.பா.ஆதித்தனார் அவர்கள். தமிழ்நாட்டில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினராகவும், சட்டப் பேரவையின் அவைத் தலைவராகவும், கூட்டுறவுத் துறை அமைச்சராகவும் பணியாற்றியவர் திரு. சி.பா.ஆதித்தனார் அவர்கள். தமிழ் ஆர்வலர்கள் அன்னாரது பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாட வேண்டுமென்று விடுத்த கோரிக்கையினை ஏற்று, **சென்னை எழும்பூரில் அமைந்துள்ள திரு. சி.பா.ஆதித்தனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அவர் பிறந்த நாளான செப்டம்பர் 27 அன்று அரசின் சார்பில் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி சிறப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். "**

திருமதி எஸ். விஜயதரணி, திரு. M. தமிமுன் அன்சாரி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ஆகியோர் இவ்வறிக்கை குறித்து தங்களது நன்றியினை தெரிவித்தனர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உறுப்பினர்களின் கருத்துக்களோடு தமது கருத்தினையும் இணைத்துக்கொள்வதாக தெரிவித்தார்.

4. <u>அரசினர் சட்டமுன்வடிவு ( அறிமுகம் செய்தல் )</u>

<u>2019–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு.</u>

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

**5. 2019-2020-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 2019-2020-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவை முன் வைத்தார்.

**6. 2018-2019-ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதி துணை நிதிநிலை அறிக்கை**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 2018-2019-ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதி துணை நிதிநிலை அறிக்கையை பேரவைக்கு அளித்தார்.

**அறிவிப்பு**

2018-2019-ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார் :–

**MESSAGE**

**"In pursuance of Clause (2) of Article 205, read with clause (3) of Article 203, of the Constitution of India, I, BANWARILAL PUROHIT, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial year 2018-2019."**

**7. 2018-2019-ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதி துணை நிதிநிலை அறிக்கை**

2018-2019-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

2018-2019-ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 14.02.2019-ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி துணை நிதிநிலை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2018-2019–ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்தார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

**அறிவிப்பு**

" 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் ( எண்.2 ) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார் ."

**8. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)**

**2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.2) சட்டமுன்வடிவு**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

**அறிவிப்பு**

"2019-2020-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார் ."

## MESSAGE

**"In pursuance of Clause (2) of Article 206, read with clause (3) of Article 203, of the Constitution of India, I, BANWARILAL PUROHIT, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants in advance, during the Financial year 2019-2020."**

**9. 2019-2020-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்**

2019-2020-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

2019-2020-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 14.02.2019-ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2019-2020-ஆம் ஆண்டின் உடனடிச் செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெறவேண்டும் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்தார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

**அறிவிப்பு**

" 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் ( முன்னளி மானிய வாக்களிப்பு ) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார் ."

**10. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)**

**2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் ( முன்னளி மானிய வாக்களிப்பு ) சட்டமுன்வடிவு**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

**11. 2019-2020-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை**

2019-2020-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் **பதிலுரை** வழங்கினார்கள்.

**12. அரசினர் தீர்மானம்**

மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிந்தார்:

" சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2019–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.20/2019), 2019–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.21/2019) மற்றும் 2019–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.19/2019) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

**13. <u>அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)</u>**

**(1) <u>2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 20 /2019)</u>**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.20/2019) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று கோரினார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 மற்றும் இணைப்பு பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்பு பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**(2) <u>2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.21/2019)</u>**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.21/2019) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று கோரினார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்பு பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்பு பட்டியல் ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**(3) <u>2019-ஆம் ஆண்டு ஓசூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.13/2019)</u>**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் 2019-ஆம் ஆண்டு ஓசூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.13/2019) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**(4) 2019-ஆம் ஆண்டு நாகர்கோயில் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.14 /2019)**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் 2019-ஆம் ஆண்டு நாகர்கோயில் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.14/2019) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**(5) 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.15 /2019)**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.15/2019) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 17 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 17 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**(6) 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 16 /2019)**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.16/2019) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**(7) <u>2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 17/2019)</u>**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.17/2019) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று கோரினார்.

திரு. எஸ். ரகுபதி அவர்கள் சட்டமுன்வடிவு மீதான விவாதத்தில் கலந்துக்கொண்டார்.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதிலளித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 58 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 58 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**(8) <u>2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/2019)</u>**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.18/2019) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 மற்றும் 3 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**அறிவிப்பு**

" 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் " என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

**(9) 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 19 /2019)**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2019-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.19/2019) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று கோரினார்.

திரு. கு. பிச்சாண்டி அவர்கள் சட்டமுன்வடிவு மீதான விவாதத்தில் கலந்து கொண்டார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதிலளித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 47 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 47 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**14. பேரவையை ஒத்திவைக்கும் தீர்மானம்**

சட்டமன்றப் பேரவை விதி 25(1)–இன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கலாம் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்தார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை பிற்பகல் **2.47** மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

**கி. சீனிவாசன்,**
**செயலாளர்.**